**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.113/2023**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செந்தில்குமார் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 3–ம் தரப்பினர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நானும் வாதியும் ஒரே ஊர் காரர்கள். வாதிக்கு கிரையம் கொடுத்த துரைசாமி அய்யன்சாலை ஊரை சேர்ந்தவர். துரைசாமியின் குடும்பற்றி தெரியும். தாவா சொத்து முதலில் துரைசாமியின் அப்பா முத்துபோயனுக்கு பாத்தியப்பட்டது. முத்துபோயனுக்கு துரைசாமி மட்டும்தான் வாரிசு. வேறு யாரும் இல்லை. முத்துபோயரின் வாரிசு சான்றிதழை பார்த்ததில்லை. செல்வகுமார் முத்துபோயனின் வாரிசு சான்றிதழை பார்த்துதான் கிரையம் வாங்கினாரா என்றால், ஆமாம். முத்துபோயனுக்கு ராஜாமணி மற்றும் காளிஸ்வரி என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. முத்துபோயன் காலம்சென்ற பிறகு, ராஜாமணி மற்றும் காளிஸ்வரி துரைசாமிக்கு எதிராக மாண்பமை சத்தியமங்கலம் சார்புநீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் வழங்கி தீர்ப்பாகி உள்ளது தெரியுமா என்றால், தெரியாது. அவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது, வாதி செல்வக்குமார் மோசடியாக தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. வாதி செல்வக்குமாருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால்,

பூசாரிபாளையம் கிராமத்தில் உள்ளது. காலை எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. எனவே, துரைசாமி வாதிக்கு எந்த காலையில், எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். தற்போது ராஜாமணி மற்றும் காளிஸ்வரி சுவாதீனம் கேட்டு மனுதாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், தற்போது தெரியும். வழக்கு சொத்தான பு.ஏ.1.18 செண்ட் துரைசாமிக்கு மட்டும் பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், துரைசாமியின் சகோதரிகளுக்கும் பங்கு உள்ளது என்றாலும், சரியல்ல. துரைசாமிக்கு சகோதரிகள் உள்ள விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தற்போதும் துரைசாமி மற்றும் அவரது சகோதரிகள் இருவரும் சேர்ந்து அனுபவத்தில் உள்ளார்கள் என்றால், சரியல்ல. வாதிதான் அனுபவத்தில் உள்ளார். தாவா சொத்து முழுவதையும் துரைசாமி வாதிக்கு கிரையம் கொடுக்க உரிமையில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.16 17:44:41 +0530

District Munsif